# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 04 திங்கட்கிழமை 21.10.2024 கதிர் 394







# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி யார்?

## விசாரணைக் குழு அறிக்கையை அம்பலப்படுத்தி கம்மன்பில கேள்வி



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளில் மிக முக்கிய சூத்திரதாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ரவி செனவிரத்னவை அந்தப் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கைகளை வெளியிடுவதற்காக கொழும்பில் இன்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசார ணைக் குழு அறிக்கைகளை வெளியிடுவதற்காக ஜனாதிபதிக்கு இன்று காலை 10.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்படுவதாக கம்மன்பில முன்னதாக தெரிவித்திருந்தார். இதன்படி இரண்டு அறிக்கைகளில் ஒன்றை இன்றும் மற்றைய அறிக்கையை எதிர்வரும் திங்கட்கிழமையும் வெளியிடவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறியுள்ளதாகவும், அவ்வாறு செய்தமைக்காக ஜனாதிபதி உடனடியாக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் உதய கம்மன்பில மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு அறிக்கைகள் இதுவரை பகிரங்கப்படுத்தப்படாத நிலையில் அவற்றைப் பகிரங்கப்படுத்துவதற்கு ஜனாதிபதி வேண்டுமென்றே தயங்குகின்றமை தொடர்பில் நான் பேசுகின்றேன்.

முதல் அறிக்கை, ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.ஐ. இமாம் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2024 ஜூன் 25 அன்று அப்போதைய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொலிஸ் அல்லது புலனாய்வுப் பிரிவினரால் ஏதேனும் விடுபட்டதா அல்லது தவறிழைக்கப்பட்டதா என ஆராய்வதே இரண்டாவது அறிக்கையின் நோக்கமாகும். ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.எம்.ஜே. டி அல்விஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவின் அறிக்கை, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் திகதி, அதாவது தற்போதைய ஜனாதிபதி நியமிக்கப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இந்த அறிக்கைகளை ஏன் மறைக்கின்றது? இந்த அறிக்கையின் 43வது பக்கத்தில், அரச புலனாய்வுப் பணிப்பாளரால் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி, மொஹமட் சஹாரான் உள்ளிட்ட தேசிய தவ்ஹீத் ஜமாத் பயங்கரவாதிகள், கத்தோலிக்க தேவாலயங்கள், பிரபல உணவகங்கள் உட்பட பல இடங்களில் தற்கொலைப்படை தாக் குதல் நடத்தவுள்ளதாக, வெளிநாட்டு புலனாய்வு பிரிவுகள் அறிவுறுத்தியுள்ளதாக குற்றப்புலானய்வு திணைக்களத்தின் சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. யார் இந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளர் ரவி சேனவிரத்னவே ஆவார். இந்த கடிதத்தில் தாக்குதலை நடத்தவுள்ள பயங்கரவாதிகளின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை எண்கள், தொலைபேசி எண்கள், முகவரிகள், பொதுவாக

2➤

## வன்னி மாவட்டத்தில் வேட்பு மனு நிராகரிப்பு ஆட்சேபனை மனு மீதான பரிசீலனை நாளை!

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக வன்னி மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தங்களது வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எடுத்த தீர்மானத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக் கோரி ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய்த மனுவை நாளை செவ்வாய்க்கிழமை பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தங்களது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து, ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணை இடம்பெற்றது.

இந்த விசாரணையின் போது, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனையைப் பெற்றதன் பின்னர் சமர்பபணங்களை முன்வைப்பதற்குக் கால அவகாசத்தைக் கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட மன்று, குறித்த மனுவை நாளை பரிசீலிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## டிஜிற்றல் ஸ்ரீ லங்காவின் பிரதானி நியமனம் பொடிவைத்துப் பேசிய ஜனாதிபதி அனுர!

நவீன இலங்கை நோக்கிய பயணத்தில் முக்கிய மைல்கல்லாக இலங்கை அரச இயந்திரத்தை டிஜிற்றல் மயப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. அதன் முதல் கட்டமாக இலங்கையின் டிஜிற்றல் முறைமாற்றத்தின் பிரதானியாக தகவல் தொழில் நுட்ப ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கோடிகாட்டியுள்ளார்.

டிஜிற்றல் இலங்கையின் பிரதானி யார் என்பதை நேரடியாகக் குறிப்பிடாத ஜனாதிபதி, தனியார் துறையிலிருந்து நிபுணர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என்றும், புதிதாக அமைக்கப்படவுள்ள டிஜிற்றல் துறை அமைச்சின் பணியாற்றக் கூடிய இந்த நிபுணர் இலங்கைத் தகவல் தொழில் நுட்ப முகவராண்மை நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், காலாவதியான தகவல் தொழில்நுட்ப சேவைகளுடன் நாம் முன்னேற முடியாது. வீட்டிலிருந்தவாறே அரச சேவைகளை மக்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அனைத்துத் துறைகளும் மேம்படுத்தப்படும். இலங்கையை டிஜிற்றல் மயமாக்குவதற்காகத் தன்னார்வ அடிப்படையில் நிபுணர் ஒருவர் முன்வந்துள்ளார். அனுபவம் நிறைந்த அந்த நிபுணர் இன்னும் ஓரிரண்டு வாரங்களுக்குள் டிஜிற்றல்

2➤

## உயிர்த்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செல்லும் இடங்கள், பழகுபவர்கள், சிலர் இரவோடு இரவாக செல்வது, அவர்கள் வந்து செல்லும் நேரங்கள் என பல விடய்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் ரவி சேனவிரத்ன மீது கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதால், அவரைக் கைது செய்ய பொலிஸார் முயற்சிப்பதாகவும், அவ்வாறு செய்யக்கூடாது எனவும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை வழக்கான 241ஃ2024ஐ நான் ஆராய்ந்துள்ளேன்.

ஏப்ரல் 09 ஆம் திகதி இந்தக் கடிதம் வந்தபோது ரவி செனவிரத்ன வெளிநாடு சென்றிருந்தார். ரவி செனவிரத்ன பின்னர் 16ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு வந்த போது அந்தக் கடிதத்தைப் பார்த்ததாகக் கூறுகிறார். அரசு அதிகாரிகள் வெளிநாடு செல்லும்போது, தங்கள் பணிக்கு வேறு ஒருவரை நியமிக்க வேண்டும். அதன்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாகஹமுல்ல இந்தப் பணியை உள்ளடக்கியதாக நியமிக்கப்பட்டுள்ளார். அப்படியானால், நாகஹமுல்லவின் கைகளுக்கு ஒருவாரம் எட்டாமல் இந்தக் கடிதம் ரவி செனவிரத்னவின் மேசையில் எப்படி இருந்தது என்ற கேள்வி எழுகிறது. இந்த கேள்வியை அப்படியே சிரஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பணிக்குழாமிடம் விசாரணை அதிகாரிகள் கேட்டிருக்கின்றனர்.

இரகசியமான கடிதங்களைத் திறக்க வேண்டாம் என்றும், அவற்றை யாருக்கும் அனுப்ப வேண்டாம்

என்றும், அவற்றை உடைக்கும் வரை அவற்றை மேசையில்வைக்குமாறு ரவி செனவிரத்ன அவர்களுக்கு அறிவுறுத்தியதாகப் பதில் வழங்கப்பட்டுள்ளது. உள்வரும் கடிதங்களைப் பார்க்க உரிமை இல்லை என்றால், பணியைக்காக நியமிக்கப்பட்ட அதிகாரி தனது கடமையைச் செய்ய முடியாது.

அதாவது சஹாரான் குழுவினர், அப்பகுதியில் வெடிகுண்டுகளை தயாரிக்கும் போதும், இந்த தாக்குதலை நாங்கள் செய்கிறோம் என காணொளி பதிவு செய்யும் போதும், கொழும்புக்கு குண்டுகளை கொண்டுசென்ற அனைத்து தகவல்களும் ரவி செனவிரத்னவின் மேசையில் இருந்த கடிதத்தில் இருந்துள்ளது.

ரவி செனவிரத்ன இந்தக் கடிதத்தை 16ஆம் திகதி பார்வையிட்டு, மே 01ஆம் திகதிக்குள் விசாரணை நடத்தி முன்னேற்றம் குறித்து தெரிவிக் குமாறு பதிவொன்றும் உள்ளது. ஆனால் அது 19ஆம் திகதி சிஐடிக்கு பொறுப்பான நாகஹமுல்லவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் மர்மமான முறையில் ஏப்ரல் 21-ம் திகதி வெடிகுண்டுகள் வெடிக்கும் வரை இந்தக் கடிதம் டிஐஜி நாகஹமுல்லாவுக்குச் சென்றடையவில்லை. அதாவது ஏப்ரல் 22ஆம் திகதி வெடிகுண்டு வெடித்த மறுநாளே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கடிதம் ரவி செனவிரத்னவின் பொறுப்பில் 12 நாட்களாக இருந்துள்ளது. 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 20 ஆம் திகதி சனிக்கிழமை விடுமுறை மற்றும் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு. எனவே, பெரும்பாலும், இந்த கடிதம் குண்டு வெடிக்கும் வரை ரவி சேனவிரத்னவின் மேசையில் இருந்து, வெடிகுண்டு வெடித்த பிறகு அத்தகைய கடிதத்தை அனுப்பியதாக புலனாய்வு பிரிவு கூறும்போது, 22 ஆம் திகதி காலையில் வந்து இதனை பார்த்து 16ஆம் திகதி என குறிப்பெழுதி 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுப்பியதாக கூறும் போது யாருக்கும் நியாயமான சந்தேகம் எழலாம். இந்த கடிதத்தை உண்மையில் படித்தால் ரவி செனவிரத்ன அவர்களுக்கு சஹாரான் யார் என்பது நினைவுக்கு வரும். ஏனெனில், பயங்கரவாத விசாரணைப் பிரிவு 2014ஆம் ஆண்டு முதல், சஹாரானின் குழுவான தௌஹித் ஜமாத் மற்றும் அவரைப் பற்றி தேடி அவர்கள் தொடர்பான அறிக்கைகளை ரவி செனவிரத்தனவிற்கே கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், சஹாரான் தொடர்பான 13 புலனாய்வு அறிக்கைகள் 2019 ஜனவரி 1 முதல் ஏப்ரல் 20 வரை மிகக் குறுகிய காலத்தில் ரவி செனவிரத்னவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின்படி, 2017 காத்தான்குடி மத மோதல், 2018 இல் வவுணதீவு பொலிஸ் உத்தியோகத்தர்களின் கொலை, 2018 இல் மாவனெல்ல புத்தர் சிலைகள் உடைப்பு, 2019 இல் வனாத்தவில்லுவில் வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்ட அனைத்து விசாரணைகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது ரவி செனவிரத்னவின் மேற்பார்வையில் உள்ளது.

எனவே வெடிபொருட்களை சேகரித்து வெடிகுண்டுகளை சோதனை செய்த சஹாரான் கும்பல் தற்கொலை தாக்குதலுக்கு செல்கிறோம் என்று கூறிய போது மற்றவர்களுக்கு இது புரியவில்லை என்றாலும் இதனை நன்றாக புரிந்து கொண்ட ரவி செனவிரத்ன உடனடியாக செயற்பட்டிருக்கலாம். ரவி செனவிரத்ன இந்தக் கடிதத்தை உண்மையாகப் படித்திருந்தால், தேடுதல் நடிவடிக்கையை முன்னெடுத்து அவர்களை கைது செய்திருக்க முடியும். குறைந்தது ஏப்ரல் 18ம் திகதியாவது தேடுதல் நடத்தியிருந்தால் சஹாரானை கைது செய்திருக்க முடியும். ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி தாக்குதலுக்காக கொழும்பு வருவதற்கு முன்னர் குருநாகலில் உள்ள தனது மனைவியின் வீட்டில் மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டுவிட்டு வந்துள்ளான்.

தமது மேசையில் ஒருவாரம் கிடந்த அதி இரகசியம் என குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தை பிரதி பொலிஸ் மா அதிபருக்கு சாதாரணமாக அனுப்புவதை விட பிரதி பொலிஸ்மா அதிபரை உடனடியாக அழைத்து இது மிகவும் முக்கியமான விடயம், உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருக் கலாம். ஆனால் இதை ஒருவாரம் மேசையில் வைத்து, இது குறித்து விசாரித்து அறிக்கை அளிக்க மே 1ம் திகதி வரை காலவகாசம் வழங்கப்படுகிறது. இது எதைக் காட்டுகிறது? ரவி செனவிரத்ன இந்தக் கடிதத்தைப் படிக்காமல், அதன் தீவிரம் புரியாமல் பதிவிட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் 41வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ரவி செனவிரத்ன மீது குற்றவியல் அலட்சியத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அப்படியானால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் முக்கிய குற்றவாளிகளில் ஒருவரே ரவி செனவிரத்ன. அவரது மேற்பார்வையில், தாக்குதல் தொடர்பாக புதிதாக விசாரணை நடத்தப்பட்டால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமா? காவல்துறையில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்குமா? இது திருடனின் தாயிடம் கேட்பதை விட திருடனையே கேட்பது போல் உள்ளது.

இந்த அறிக்கை எமக்கு கிடைக்க முன்னர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவி சேனவிரத்ன நியமிக்கப்பட்ட போது இதில் உள்ள தவறை சுட்டிக்காட்டினோம்.

அத்துடன், அல்விஸ் அறிக்கையின் பக்கம் 14 இல், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன மற்றும் அதன் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோர் தமது கடமைகளை சரியாகச் செய்யாதமைக்காக குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் 17 அதிகாரிகளின் பெயர்கள் உள்ளன, அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும். இந்த அறிக்கையை ஏன் ஜனாதிபதியும் இந்த அரசாங்கமும் நசுக்க முயற்சித்தார்கள்? காரணம் ஜனாதிபதியின் கையாலாகாத்தனம்.

இந்த அறிக்கைகளை நாம் இன்று வெளியிட வில்லை என்றால், இவர்களை வழக்கு தாக்கல் செய்யாமல் காப்பாற்ற ஜனாதிபதியால் முடியும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் குற்றம் சாட்டப்பட்டவர் என்று தெரிந்தும், ரவி செனவிரத்னவை அழைத்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியை ஒப்படைத்து அவரது மேற்பார்வையில் உயிர்த்த ஞாயறு தாக்கதல் விசாரணையை நடத்த தீர்மானித்தது ஏன்? உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையதாக கூறப்படும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை கூட நம்பும் தேசிய மக்கள் சக்தியினர்,

அக்கட்சியின் தேசிய பட்டியலில் உள்ள மொஹமட் இப்ராஹிமை காப்பாற்றுவதற்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான தகவல்களை திரித்து நாட்டையும் ஏமாற்றி மக்களையும் ஏமாற்றி உள்நோக்கத்திற்காக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதா? என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது" என உதய கம்மன்பில மேலும் குறிப்பிட்டார்.

## டிஜிற்றல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மயமாக்கல் துறையில் நியமிக்கப்படுவார். அவர் பொறுப்பேற்றுக் கொண்டதும் இலங்கையில் எவரும் எதிர்பார்க்க முடியாத மாற்றங்கள் ஏற்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும், இரண்டு மாதங்களில் நாம் தடுமாறிவிடுவோம் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள், ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்ப உறுதி பூண்டுள்ளது. இந்தப் பயணத்திலிருந்து நாங்கள் விலக மாட்டோம் என்றும் உறுதிபடக் கூறினார்.

## வாகனங்களைக் கையளித்தார் மஹிந்த!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்த மூன்று வாகனங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஒரு அம்புலன்ஸ், ஒரு வான் மற்றும் ஒரு கப் ரக வாகனம் ஆகியன ஜனாதிபதி செயலகத்துக்கு ண்டுவரப்பட்டு கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# நாடாளுமன்றத் தேர்தல் 2024









ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திகாமடுல்ல மாவட்ட வீடு, வீடாகச் சென்று பிரசார நடவலடிக்கையில் ஈடுபட்டார்.
(படங்கள் : எம்.எஸ்.எம். ஸாகிர்)

## தேயிலைத் தொழிலை நம்பி இராது கல்வி கற்று வெளியே வர வேண்டும்!

### மருதபாண்டி ரமேஸ்வரன் கோரிக்கை





(தலவாக்கலை பி.கேதீஸ்)

எமது சமூகம் தேயிலை தொழிலை மாத்திரம் நம்பி இருக்க கூடாது தோட்டங்கள் எமது இருப்பிடமாக இருக்கலாம் ஆனால் நாம் இங்கிருந்து கல்வி கற்று வெளியே வர வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

நுவரெலியா வெஸ்டடோல் பகுதியில் நடைப்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. கல்வியே எமது சமூகத்தை முதன்மைப் படுத்தும். நமது வளர்ச்சி கல்வியிலேயே தங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் கடந்த ஒன்றரை வருடங்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நானும் ஜீவன் தொண்டமானும் நுவரெலியா மாவட்டத்திற்கு கொண்டு வந்தோம். அதில் அதிகமானவை கல்விக்கே முன்னுரிமை கொடுத்துள்ளோம். ஒரு சமூகம் தலைநிமிர்ந்து வாழ கல்வியே முதன்மை வகிக்கின்றது. அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் புதிய பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு 300 மில்லியன் நிதியை பெற்றுக் கொடுத்துள்ளோம். பாடசாலைகளுக்கு கணணி,பொட்டோ கொப்பி இயந்திரங்கள், மடி கணணி போன்றவற்றை பெற்றுக்கொடுத்துள்ளோம். மலையகத்திலே மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் முதல் இன்றுவரை இ.தொ.கா கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. மலையகத்திலே கல்வி கற்ற இளைஞர் யுதிகளுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் முகமாக 2530 உதவி ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம் அது தற்போது வழக்கில் இருக்கிறது அதற்கு ஒரு தீர்வு நிச்சயமாக வரும் காத்திருப்போம். அதேபோல் நாங்கள் கூறியது போல தோட்டத் தொழிலாளர்களுக்கு 1350 அடிப்படை சம்பளத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளோம். கடந்த பாராளுமன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ஐந்து பேர் போட்டியிட்டோம் அதில் இரண்டு பேர் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றோம். எமது கட்சி சார்பாக போட்டியிட்டவர் 48 ஆயிரம் வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். அதே நேரம் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட வெளி மாவட்ட நபர் ஒருவர் 28 ஆயிரம் வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார். இருவருக்குமே பாராளுமன்றம் செல்ல முடியவில்லை. நுவரெலியா மாவட்ட மக்கள் அப்போது எமது கட்சியில் போட்டிட்டவரை வெற்றி பெறச் செய்திருந்தால் அவரும் உங்களுக்கு சேவை செய்திருப்பார்.

வெளியிலிருந்து வருபவர்களுக்கு எமது வாக்குகளை வழங்கினால் அவர்கள் எமக்கு ஒன்றும் செய்யபோவதில்லை. இம்முறை நிறைய சுயேட்சை குழுக்கள் பல நுவரெலியா மாவட்டத்தில் களம் இறக்கப்பட்டுள்ளது.

சில பேருக்கு சுயேட்சை குழு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதே தெரியவில்லை அவர்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் நான்கு சுயேட்சைக் குழுக்களும் பதிவு செய்யப்பட்ட மூன்று கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய தெரியாதவர்கள் எவ்வாறு மக்களுக்கு சேவை செய்ய போகின்றார்கள். எனவே எமது மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார்.





# நாடாளுமன்றத் தேர்தல் 2024



# குகதாஸனின் பரப்புரை மூதூரில் ஆரம்பம்!





(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் சண்முகம் குகதாசனின் தேர்தல் பரப்புரைப்பணிகள் மூதூர் கிழக்கில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மூதூர் கிழக்கு சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ.அரசரெத்தினத்திடம் முதலாவது பரப்புரைப் பிரசுரம் கையளிக்கப்பட்டு பரப்புரை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, குகதாசனின் ஆதரவாளர்களால், பாட்டாளிபுரம், வீரமாநகர், சீனன்வெளி, உப்புறல், இளங்கத்தை, இத்திக்குளம், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர், மலைமுந்தல் உள்ளிட்ட பல பகுதிகளில் குகதாசனின் பரப்புரைப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தொடர்ந்து, இரண்டாவது நாளாக இன்றும் மூதூர் கிழக்கில் பரப்புரைப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

பரப்புரைப்பணிகளின் போது வேட்பாளர் சண்முகம் குகதாசனுக்கு மக்கள் அமோக ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.




## தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய "மழைச்சாரல் தொடர்கிறது" கவிதை நூல் வெளியீடு



தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய "மழைச்சாரல் தொடர்கிறது" கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னாள் பீடாதிபதியுமான எம்.எல்.பௌசுல் அமீர் தலைமையில் இடம்பெற்ற இந் நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பீ.ஹாஜா முகைதீன் கலந்து கொண்டார். பிரபல தொழிலதிபரும், அல் - மஸ்ஜிதுல் பலாஹ் ஜ/ம்ஆ பள்ளிவாசலின் தலைவருமான எஸ்.எச்.ஜெஸாஹீர் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

இந் நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மூத்த கல்விமான்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், கலை இலக்கியப் பேரவை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், , இலக்கியவாதிகள், நலன்விரும்பிகள், ஊர் பிரமுகர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். .

# துணைவேந்தர் சுற்றுக்கேடய சுற்றுப் போட்டியில் யூ.ஓ.ஜே வாறியர்ஸ் அணி வெற்றி பெற்றது!












யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுற்றுக் கேடயத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பதில் துணைவேந்தரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துடுப்பாட்ட அணியின் முன்னாள் தலைவரும், தாவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் இ.கபிலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்தச் சுற்றுப் போட்டியின் மூன்றாவது இடத்தை யூ.ஓ.ஜே ஈகிள்ஸ் அணியும், இரண்டாவது இடத்தை யூ.ஓ.ஜே ரைற்றன்ஸ் அணியும் பெற்றுக் கொண்டன. யூ.ஓ.ஜே வாறியர்ஸ் அணி முதலாமிடத்தைப் பெற்று சுற்றுக் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# போதையில் நீராடச் சென்ற இருவருவருக்கு நேர்ந்த சோகம்

மது போதையில் நீராடச் சென்ற இருவர்நீரில்மூழ்கிஉயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹட்டகஸ்திகிலிய, இஹல கங்ஹிடிகம வாவி நேற்று (20) உயிரிழந்தவர்கள் 24 மற்றும் 34 வயதுடைய பொல்கஹவெல மற்றும் பூஜாபிட்டிய பகுதியைச்சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இருவரும் வேறு இருவருடன் மது அருந்திவிட்டு நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலங்கள், கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையின் பிரேத அறையில்பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் கஹட்டகஸ்திகிலிய பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.









# கடந்த 9 மாதங்களில் 8 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு

நாட்டில் கடந்த 9 மாதங்களில் இணையவழி மோசடிகள் மற்றும் போலி முகநூல் கணக்குகள் தொடர்பில் 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு (SLCERT) தெரிவித்துள்ளது.


இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் பொறியியலாளர் சாருக தமுனுபொல இது தொடர்பில் தெரிவிக்கையில், சமூக ஊடகங்களில் உள்ள போலிக் கணக்குகள் மூலம் அதிகளவான இணையவழி மோசடிகள் இடம்பெறுகின்றன.

இணையவழி மோசடிகள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற 8 ஆயிரம் முறைப்பாடுகளில் 200 முறைப்பாடுகள் ஒ.டி.பி இலக்கங்களுடன் தொடர்புடையவை ஆகும்.

தங்களது ஒ.டி.பி. இலக்கங்களை பல்வேறு நபர்களுக்குப் பகிர்வதாலும் அதிகளவான இணையவழி மோசடிகள் இடம்பெறுகின்றன.

இதனால், பொதுமக்கள் தங்களது ஒ.டி.பி. இலக்கங்களை எந்த சந்தர்ப்பத்திலும் வேறு நபர்களுக்குப் பகிர வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# களவில் சிக்கிய மட்டக்களப்பு தம்பதி!



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளை சம்பவம் தொடர்பில் கணவன்,மனைவி இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லடி திருச்செந்தூரில் அமைந்துள்ள வீடொன்றின் உரிமையாளர் வீட்டைப் பூட்டிவிட்டு பிறந்தநாள் விழா ஒன்றிற்கு சென்ற நிலையில் தனது கணக்கில் இருந்து 13000 ரூபாய்க்கு பொருட்கள் கொள்வனவு செய்துள்ளதாக குறுஞ்செய்தியொன்று வந்தது.

இதையடுத்து உடனடியாக வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டிலிருந்த அலுமாரியை உடைத்து அலுமாரிலிருந்த தங்க நகைகள் , ஏ.டி.எம் அட்டை என்பன திருடபட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொண்ட விசாரணையின் போது வீட்டின் மேல் பகுதியில் வாடகைக்கு குடியிருந்த தம்பதியினர் வீட்டுக்குள் நுழைந்து வீட்டிலிருந்த தங்க பாதையைத் திருடி மட்டக்களப்பு நகரிலுள்ள நகைக்கடை ஒன்றில் 2,60 000 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர்.

அதோடு வீட்டிலிருந்த ஏ.டி.எம் அட்டையையும் திருடி அருகிலுள்ள பூட் சிட்டி ஒன்றில் 13,000 ரூபாய்க்கு பொருட்களை கொள்வனவு செய்துன்னமை தெரியவந்துள்ளது.

மேற்படி பல்பொருள் பூட் சிட்டியின் சிசிடிவி கேமராவை பரிசோதித்த போது சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு தங்க மாலை மற்றும் ஒரு லட்சத்து ஐயாயிரம் ஷரூபாய் பணம் ஏ.டி.எம் அட்டை என்பன மீட்கப்பட்டுள்ளன .

மேலும் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதுடன் சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதிமான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

# வைத்தியசாலைப் படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல்









இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட வைத்தியர்கள், வைத்தியப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி உள் நுழைந்த இந்தியப் படையினர் அங்கு கடமையில் இருந்த வைத்தியர்கள், வைத்தியசாலைப்பணியாளர்கள் 21 பேர் உட்பட 68 பேரைச் சுட்டுப் படுகொலை செய்திருந்தனர். வைத்தியசாலைப் படுகொலையின் 37 ஆவது நினைவேந்தலே இன்று காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தோருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு உயிரிழந்தவர்களின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது.

போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் உட்படப் பலர் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்






# புலமைப்பரிசில் பரீட்சை வினா கசிவு ஆணைக்குழுவின் பரிந்துரை விரைவில்




தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சர்ச்சையை ஏற்படுத்திய முதலாவது பகுதி வினாத்தாள் தொடர்பான தமது பரிந்துரைகளை விரைவில் முன்வைக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த வினாத்தாளின் சில வினாக்கள் கசிந்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணை அறிக்கை ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார். குறித்த அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னர் தமது ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதனிடையே, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெறும்வரை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட மாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளின் சில வினாக்கள் கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைகளம் அண்மையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இதனையடுத்து, குறித்த வினாத்தாளின் 3 வினாக்கள் கசிந்துள்ளதாகவும் அதற்கான புள்ளிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது. இதனிடையே, சர்ச்சையை ஏற்படுத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, உயர் நீதிமன்றத்தில் அண்மையில் அடிப்படை உரிமை மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.10.2024 இல் வெளியிடப்பெற்றது.